# உள்ளடங்கல் கல்விக்கான முதன்மை திட்டமொன்றை இலங்கை கல்வியமைச்சு உருவாக்குகின்றது



குறைபாடுகள் உள்ள பிள்ளைகள், பாடசாலைகளின் வழமையான வகுப்பறைகளிலும் விசேட கல்விப் பிரிவிலும் கல்வி கற்று வருகின்றனர் என இலங்கையின் கல்வியமைச்சு தெரிவிக்கின்றது[1]. எனினும், கல்வியை பெற்றுக்கொள்வதிலும், கல்விச் செயற்பாடுகளில் கலந்துகொள்வதிலும், முன்னேற்றத்தை அடைந்துகொள்வதிலும் குறைபாடுகள் உள்ள பிள்ளைகள் பல்வேறு இடையூறுகளை தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர் என, இலங்கையிலுள்ள குறைபாடுகள் உள்ள பிள்ளைகளுக்கான உள்ளடங்கல் கல்வி நடைமுறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) வெளியிட்டுள்ள அறிக்கையி[2] தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டதென குறித்த அறிக்கை குறிப்பிடுகின்றது. குறிப்பாக, உள்ளடங்கல் கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கு காணப்படும் வரையறுக்கப்பட்ட திறன்கள், பொருத்தமானதும் அணுகக்கூடியதுமான கட்டமைப்புகள் பாடசாலைகளில் இல்லாமை மற்றும் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டங்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இந்நிலையில், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான உள்ளடங்கல் கல்வியை வலுப்படுத்துவதற்கான செயற்திட்டத்தை,

---

[1] Number of children with disabilities enrolled in regular and special education units in schools, 2012, Ministry of Education, Education Sector Development Framework and Programme (ESDFP) 2013–2017, Ministry of Education Policy and Planning Branch, Battaramulla, 2012 (Figure 1 - https://www.unicef.org/rosa/media/17016/file/Country%20Profile%20-%20Sri%20Lanka.pdf).

[2] Disability-Inclusive Education Practices in Sri Lanka, UNICEF, 2021 - https://www.unicef.org/rosa/media/17016/file/Country%20Profile%20-%20Sri%20Lanka.pdf

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் (JICA) தொழில்நுட்ப ஒத்துழைப்பு மூலம் உள்ளடங்கல் கல்வி அணுகுமுறை (REACH-SS) செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் கல்வியமைச்சு நடைமுறைப்படுத்துகின்றது.

2000ஆம் ஆண்டு கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை முறையாகவும் திறம்படவும் நடைமுறைப்படுத்துவதற்காகவும் பங்குதாரர்களிடையே புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காகவு*ம்* நடுத்தரம் (3 வருடங்கள்) முதல் நீண்டகால (5–10 வருடங்கள்) திட்டத்தினை உருவாக்குவதற்கான பணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், REACH-SS மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்குதாரர்களின் முன்னோடி திட்டங்களில் இருந்து பெறப்பட்ட பெறுபேறுகளும் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

பணிக்குழுவானது தனது முதலாவது கூட்டத்தினை 2022 ஏப்ரல் 6ஆம் திகதி ஆரம்பித்தது. 2019–2030 உள்ளடங்கல் கல்வித் திட்டத்தை மறுபரிசீலனை செய்த பின்னர், கல்வியமைச்சின் உள்ளடங்கல் கல்வி சுற்றறிக்கைக்கு இணங்க, மேற்படி திட்டத்தை புதுப்பிப்பதற்கான ஒரு வரைபடத்தை உருவாக்கியது. அதன் பிரகாரம், உள்ளடங்கல் கல்விக்கான முதன்மை திட்ட*த்தை* உருவாக்கும் செயன்முறை, நிபுணர்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது.



இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளும் பாரபட்சமின்றி உயர்தரமான கல்வி வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதை இந்த முதன்மைத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன்படி, சம்பந்தப்பட்ட தரப்பினரால் தயாரிக்கப்பட்ட செயற்திட்டங்களை பகிர்ந்துகொள்ளும் நோக்கிலும், உப குழுக்களிலுள்ள நான்கு பகுதிகளின்

அடிப்படையில் உள்ளடங்கல் கல்வி முதன்மை திட்டத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு, 2023 செப்டெம்பர் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் செயலமர்வு ஒன்று நடைபெற்றது.

அடையாளம் காணப்பட்ட நான்கு பகுதிகளும் வருமாறு:

1. கல்வியை பெற்றுக்கொள்ளல் மற்றும் பங்கேற்றல்
2. அனைத்து மாணவர்களுக்கும் தரம் மிக்க கல்விக்கான வாய்ப்பு
3. பாடசாலைகளில் உள்ளடங்கல் கல்விச் செயற்பாட்டினை வலுப்படுத்தல்: கல்வி முறைமையின் திறன் அபிவிருத்தி
4. கல்வி முறைமையில் உள்ளடங்கல் கல்வி கலாச்சாரத்தை உருவாக்குதல்

அனைத்து தரப்பினரதும் பங்களிப்பு இன்றி, உள்ளடங்கல் கல்வியினை பூரணப்படுத்த முடியாது. செயற்திட்ட அனுபவங்களை தேசிய ரீதியில் பகிர்ந்துகொள்வதற்கான மூலோபாயங்களுடன், உள்ளடங்கல் கல்வி முதன்மை திட்டத்தை உருவாக்குவதற்கு ஒரு பணிக்குழாம் நிறுவப்பட்டுள்ளது. கல்வி அமைச்சிற்கு உள்ளேயும் வெளியேயும் என, உள்ளடங்கல் கல்வி தொடர்பான பல்வேறு தரப்பினரையும் செயலமர்வின் ஏற்பாட்டாளர்கள் அழைத்திருந்தனர்.

இச்செயலமர்வின் பங்கேற்பாளர்களாக, கல்வியமைச்சின் முறைசாரா மற்றும் விசேட கல்விப் பிரிவு, மனிதவள மேம்பாட்டுப் பிரிவு, கண்காணிப்பு மற்றும் செயற்திறன் மீளாய்வுப் பிரிவு, ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, ஆரம்பக் கல்விப் பிரிவு, அனைவருக்கும் கல்விப் (EFA) பிரிவு, பாடசாலை பணிகள் பிரிவு, பாடசாலை செயற்பாடுகள் பிரிவு, தேசிய கல்வியியற் கல்லூரிப் பிரிவு, இணைப்பாடத்திட்டம், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைப் (CGC) பிரிவு, உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பிரிவு, பரீட்சைகள் திணைக்களம், விசேட மற்றும் உள்ளடங்கல் கல்விக்கான தேசிய நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம் (உள்ளடங்கல் கல்விப் பிரிவு மற்றும் ஆரம்பக் கல்விப் பிரிவு), சமூக சேவைகள் திணைக்களம், சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகம், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் மற்றும் குறைபாடுகள் உடையவர்களுக்கான தேசிய செயலகம், JICA, UNICEF, Save the Children ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்பாளர்களாகக் கலந்துகொண்டனர். அத்தோடு, பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லீனா மற்றும் இலங்கை

திறந்த பல்கலைக்கழகத்தின் திரு. கேதீஸ்வரன் ஆகியோர் கண்காணிப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.



செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாத் சேதுங்க, வகுப்பறைகளில் உள்ளடங்கல் கல்வி பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்ளும் கல்வியாளர்கள் குழுக்களை உருவாக்கும் நோக்கத்துடன், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்விப் பீடங்கள் தமது இளங்கலைப் பட்டப்படிப்புகள் மற்றும் முதுகலை டிப்ளோமாக்களில் உள்ளடங்கல் கல்வி மீது கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டார். “கற்றல் பெறுபேறுகளை எளிதாக்குவதன் மூலமே உள்ளடங்கல் கல்வி ஆரம்பமாகின்றது. இவ்வாறு செய்யும்போது, பாடத்தின் நோக்கங்களை செயற்பாட்டு ரீதியில் அனைத்து மாணவர்களுடனும் ஆசிரியர்களுக்கு அடைந்துகொள்ள முடியும். கல்வியமைச்சு சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளதோடு, இத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக அமைச்சரும் கரிசனை கொண்டுள்ளார். ஆகவே, இந்த முதன்மை திட்டத்தை இறுதிப்படுத்துவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த முதன்மை திட்டத்திற்கு ஒவ்வொரு துறையும் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றதென, பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதன்போது தெளிவுபடுத்தினர். REACH-SS அமைப்பின் குழுத் தலைவரான திரு. சுகெய் ஒகுச்சி தலைமையில் செயலமர்வின் ஆரம்ப அமர்வு இடம்பெற்றது.